புலி சொல்லும் கவி

விசு அய்யர்

நூல் அறிமுகம்

நூலின் பெயர்	: **புவி சொல்லும் கவி**
நூல் ஆசிரியர்	: விசு அய்யர்
எழுத்து	: 11 புள்ளி
முதற் பதிப்பு	: 2023
உரிமை	: ஆசிரியருக்கு
கணினி அச்சு உதவி	: மணி பதிப்பகம்
பக்கம்	: 36
மதிப்பு	: இந்திய ரூபாயில் ரூ.30

வாழ்த்துரை

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். - திருக்குறள்.

R. Manikandan Iyer
Treasurer-arulalayam

புத்தகத்தை படைக்கும் இந்த நூல் ஆசிரியர் தனது ஆழமான சிந்தனைகளை புத்தகத்தில் படைப்பது போல, அந்த புத்தகத்தின் தலைப்பை அமைப்பதிலும் தனது படைப்பு உத்தியில் சிறந்து விளங்கி நிற்கிறார்.

இந்த புத்தகம் தமிழின் சிறப்பை சொல்ல வந்ததா? என்று சிந்திக்க தோன்றும் போது, இப்படி ஒரு "சித்திர கவி" தமிழில் இருப்பதே சிறப்பு. அதுவும் இது போன்ற சித்திரகவி அமைப்பில் திருஎழுகூற்றிருக்கையை பாடி அமைத்தவர் ஐந்து பேர் தான் என்ற தகவல் ஆச்சரியமாகவே இருக்கிறது. அந்த ஐந்து பேர் அருளிய திருஎழுகூற்றிருக்கைகளை தொகுத்து இந்த ஒரே புத்தகத்தில் படைத்து தந்து இருப்பது ஆசிரியரின் முயற்சிக்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்து இருக்கிறது.

தமிழே அமுது. அந்த அமுதில், இது போன்ற சுவை இருப்பதை நமக்கு அடையாளம் காட்டி அந்த சுவையினை நமக்கு பருக தந்த நூலாசிரியருக்கு, நன்றியையும் வணக்கத்தையும் பதிவு செய்கிறேன்.

தமிழ் அறிந்த நல் உலகமும், இறையன்பர்களும், இந்த நூலை போற்றி வணங்குவார்கள் என்பதில் துளி அளவும் சந்தேகம் இல்லை.

இத் தொகுப்பு மிகவும் எளியமுறையில் இனிய தமிழில், எழுகூற்றிருக்கை பற்றிய சுருக்கமான விளக்கம் தந்து அந்த பாடல் முழுவதையும், நமக்கு தொகுத்து தந்த நூல் ஆசிரியரை மனதார பாராட்டி மகிழ்கிறேன்.

கடவுள் மறுப்பு கொள்கை உடைய மாற்று சிந்தனைகளை உடைய அன்பர்கள் மத்தியிலும், தமிழின் சிறப்பை ஒருகணம் நின்று யோசிக்க வைக்கும் இந்நூல், என்பதில் பெருமையும் மகிழ்ச்சியும், நிச்சயம் கிடைக்கும்.

இந்த நூல், மேலும் பல நூல்களை ஆசிரியர் படைக்கும் முயற்சியில் தொடரவேண்டும் என நூல் ஆசிரியரை வாழ்த்தி வணங்குகிறேன்.

உங்கள்

மணிகண்டன்

maniiyer73@gmail.com

என்னுரை

தமிழ் பேசும் பல குடும்பங்களில் கூட தமிழ் படிக்கும் பிள்ளைகள் அருகி வருகிற இந்த சூழலில், இப்படியும் தமிழில் இருக்கிறது என்று சொல்லும்படியாக கவி வகைகளில் உள்ள எழுகூற்றிருக்கையாக அமைந்த பாடலை இந்த புத்தகத்தில் அமைய செய்து தொகுத்து உள்ளது மனதிற்கு இன்பத்தை தருகிறது.

"**புவி சொல்லும் கவி**" என்ற தலைப்பில் அமைந்த இந்த புத்தகம் கவிதை புத்தகமா? என்ற சிந்தனை உங்களுக்கு வரலாம். உண்மை தான். தமிழில் நால்வகை கவிகளுள் ஒன்றான எழுகூற்றிருக்கை என்ற சித்திரகவியை தொகுத்து தருவது தான் இந்த புத்தகம்.

இந்த எழுகூற்றிருக்கை என்ற கவி வழிபாட்டில் பக்தி இலக்கியத்தில் மட்டுமே இடம் பெற்று உள்ளது அதனால் "திரு" என்ற அடைமொழி சேர்த்து திருஎழுகூற்றிருக்கை என போற்றப் படுகிறது.

சோதிட ரீதியாக சொல்ல வேண்டுமானால், திருஎழுகூற்றிருக்கை தினமும் படிப்பவர்கள் கடன் தொல்லையில் இருந்து விரைவில் மீண்டு வரலாம் என்று சொல்லும்படி அமைந்து இருக்கும்.

இதுவரை தமிழில் எழுகூற்றிருக்கை பாடியவர்கள் நாம் அறிந்தவரை ஐந்து பேர் தான். அவர்கள், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், நக்கீரர், திருமங்கையாழ்வார், அண்மை காலத்தில் வாழ்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி ஸ்வாமிகள்.

வண்ணச் சரபம் தண்டபாணி ஸ்வாமிகள் பல எழு கூற்றிருக்கைகளை பாடி இருக்கிறார்கள். இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பாடல் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி பெருமாள் மீது பாடப்பெற்ற பாடல் ஆகும். அதனால் தான் இந்த

புத்தகத்திற்கு அட்டை படமாக பார்த்தசாரதி பெருமாளே நின்று அருள்பாலிக்கிறார்.

அந்த ஐவர் பாடி அருளிய எழுகூற்றிருக்கை பாடலை தொகுத்து தருவதே இந்த நூலின் அமைப்பு. இந்த எழுகூற்றிருக்கை பாடலின் பொருளோ விளக்கமோ சொல்லவில்லை. இது தமிழ் அதை அப்படியே படியுங்கள். இறைவன் உள்நின்று உணர்த்துவான் என்ற நம்பிக்கையுடன் படித்தால், இன்னல்கள் மாறும், கடன் தீரும், வளமான வாழ்க்கை அமையும் என்பதில் எள் அளவும் சந்தேகம் இல்லை.

“**புவி சொல்லும் கவி**” என்ற இந்த நூலினை வழக்கம் போல கணினி அச்சு செய்து புத்தகமாக உருவாக்கி கொடுத்த **மணி பதிப்பகத்தாரு**க்கு நன்றியை பதிவு செய்கிறேன்.

எனது வேண்டுகோளை ஏற்று நூலிற்கு மதிப்புரை தந்த என் அன்பிற்குரிய அருளாலயம் அமைப்பின் பொருளாளர், **திரு.மணிகண்டன்** அவர்களுக்கு அன்பையும் நன்றியையும் பதிவு செய்கிறேன்.

நமது நூல் படைப்பின் வரிசையில் இன்னொரு, மைல் கல் என்ற ஆவலில் இந்த புத்தகத்தினை வழக்கம் போல வாங்கி படித்து, தினமும் படித்து பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டுகிறேன்.

இந்த புத்தகத்தில் உள்ள திருஎழுகூற்றிருக்கை கவி அமைப்பை மக்கள் அறிய செய்ய வேண்டும். மற்றவர்களையும் படித்து பயன் பெற செய்ய வேண்டும். அதுவே இந்த நூலுக்கு நீங்கள் தரும் விலை ஆகும்.

இந்த நூல் அமேசான், விக்கி மீடியா மற்றும் மின் நூலகம் போன்ற தளங்களில் கிடைக்கும். channel G என்ற podcastல் ஆடியோவாகவும் கேட்டு பயன்பெறலாம்.

பேரன்புடன்

விசு ஐயர்

iyervisuiyer@gmail.com

பதிப்புரை

இது கவிதை புத்தகமா? ஆன்மிக புத்தகமா? என ஒரு நிமிடம் சிந்திக்க வைத்தது. வழக்கம் போல நூல் ஆசிரியரின் வித்தியாசமான உணர்வுகளை படைக்கும் நூல் வரிசையில் தமிழில் அமைந்துள்ள சித்திரகவி படைப்பில் அமைந்துள்ள எழுகூற்றிருக்கை பாடலை அமைந்து வழங்கிய ஐவரின் பாடல்களையும் தொகுத்து தந்து இருப்பது பாராட்டுக்குரியது.

தமிழ் பேசுபவர்கள் இந்த தாய் தமிழ்நாட்டில் குறைந்து வரும் இந்த காலத்தில் தமிழிலில் இப்படி ஒரு சித்திர கவி அமைப்பு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி அந்த பாடல்களை தொகுத்து தந்து இருப்பது இந்த நூல் ஆசிரியரை ஒரு படி மேலே நிறுத்தி பார்க்க வைக்கிறது.

நூல் ஆசிரியர் தம் திறமையையும் படைப்பு திறனையும் ஒவ்வொரு பதிப்பிலும் பதிப்பாசிரியராக நாங்கள், பார்த்து வியந்து இருக்கிறோம். அந்த வரிசையில், இது ஒரு தொகுப்பு நூலாக இருந்தாலும், இது மேலும் ஒன்று என பெருமை கொள்கிறோம்.. ஆசிரியர் தம் எண்ணங்களிலும் சரி, செயல்களிலும் சரி, தனக்கு என தனி முத்திரை கொண்டு, தனி ஒருவனாக, தன்னை முன் நிறுத்தி காட்டும் வல்லவர்.

இந்த இருபதாம் நூற்றான்டில், இப்படி கூட ஒருவரா என்று நாங்கள் வியப்பில் ஆழ்ந்தது உண்டு. இந்த பெருமகனாரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் நூலக பதிப்பித்து படைத்து தருவதில் பேரின்பம் அடைகிறோம்.

தொடர்ந்து வரும் அவரது நூல்களையும் தொய்வில்லாமல் தரும் சிந்தனைகளையும் அன்பர்கள் படித்து பயன் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த நூல்களை படித்து பயன் பெறுவது ஒன்றே நூல் ஆசிரியருக்கு நாம் தரும் ஊக்க மருந்து எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் அறிவை பகிரும் இந்த நூல் ஆசிரியர் தம் எண்ணங்களுக்கு பலம் சேர்ப்போம் பயன் பெறுவோம்.

- பதிப்பாளர்

புலி சொல்லும் கவி

தமிழில் கவி இலக்கியம் ஒரு சுவை மிக்கது. ஆசு கவி, மதுர கவி, சித்திரகவி, வித்தார கவி என நால் வகை கவிதை வகைகளில், சித்திர கவி தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ளது.

இப்பாவகையில் இயற்றப்படும் பாடல்கள், வட்டம், சதுரம், முக்கோணம் போன்ற கணித வடிவங்களிலும், பாம்பு, விளக்கு, அன்னம், தேர் போன்ற பல ஓவிய வடிவங்களிலும் பொருந்தும் வகையில் அமைக்கப்படுவன.

'நாற்கவி ராஜன்' என்று அருணகிநாதரால் போற்றப்படும் திருஞானசம்பந்தரால் அறிமுகப் பட்டதாகச் சொல்லப்படும் சித்திர கவிச் செய்யுள்களை இயற்றுபவர் தாம், தேர்ந்தெடுத்த செய்யுளுக்கான இலக்கண விதிகள் மட்டுமன்றி, சித்திர வடிவத்தை ஒட்டி வகுக்கப்பட்டுள்ள விதிகளையும் மனத்தில் கொண்டு தம் கவிதையை அமைக்க வேண்டும்.

சித்திர கவி வல்லுநர்களில் சிலர் மட்டுமே கூற்றிருக்கைச் செய்யுள்களை இயற்றியுள்ளனர்.

ஒன்று முதலா ஓரே(ழு) ஈறாச்
சென்றஎண் ஈரேழ் நிலம்தொறுந் திரிதர
எண்ணுவ(து) ஒன்றாம் எழுகூற்றிருக்கை..

ஒரு கூறு என்பதை ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ‘அறை’களை (cell or box) கொண்ட வரிசை (row) என்று கருதலாம். கூறில் உள்ள ஒவ்வொரு அறையிலும், பொருளாலோ அல்லது ஒலியாலோ எண்ணைக் குறிக்கும் சொல்லொன்று தனியாகவோ அல்லது அதனுடன் இருக்கும் சொற்களின் கூட்டுடனோ அடைக்கப்படும். அறைகளில் குறிக்கப்படும் அதிகபட்ச எண்ணை ஒட்டிக் கூற்றிருக்கையின் பெயர் எழுகூற்றிருக்கை, எண்கூற்றிருக்கை என்ற வகையில் அமையும்.

இலக்கியத்தில் காணும் பெரும்பாலானவை எழுகூற்றிருக்கை அமைப்பைக் கொண்டவை. எழுகூற்றிருக்கையின் கூறுகளைக் கீழ்க்கண்ட வண்ணம் அமைத்தால் ஒரு தேரின் வடிவம் கிட்டும்.

1 x 1 = 1

11 x 11 = 121

111 x 111 = 12321

1111 x 1111 = 1234321

11111 x 11111 = 123454321

111111 x 111111 = 12345654321

1111111 x 1111111 = 1234567654321

11111111 x 11111111 = 123456787654321

111111111 x 111111111 = 12345678987654321

மேலுள்ள எழுகூற்றிருக்கை அமைப்பின் முதல் கூறில் ஒரு அறை, இரண்டாவதில் மூன்று அறைகள் என்ற வகையில் ஏழாவது கூறில் பதின்மூன்று அறைகள் இருப்பதைக் கவனிக்கவும். இந்த அமைப்பில் தேர்த்தட்டுக்கு மேலுள்ள முக்கோண அமைப்பு, கணித இயலில் உள்ள 'பாஸ்கல் முக்கோணம்' (Pascal Triangle) போலக் காணப்பட்டாலும், இதன் அறைகளுக்குள் உள்ள எண்களுக்கு இடையே உள்ள தொடர்பு மாறுபட்டது. எழுகூற்றிருக்கையின் இந்த அமைப்பில் உள்ள கணித நுண்மையை வியப்பிற்குரியது.

அதாவது, தேர் அமைப்பின் ஒவ்வொரு கூறிலிலுள்ள எண்களும் 1 என்னும் எண்ணிலிருந்து விளைகிறது என்று காண்கிறோம். வேறொரு கண்ணோட்டத்தில், இது தன்னையன்றி வேறெதும் இல்லாத பிரமம் என்னும் ஒன்று (மாயை என்னும் ஆற்றலைப் பயன்படுத்தித்) தன்னைத் தானே பெருக்கிக் கொண்டு எண்ணற்ற வகைப் பொருள்கள் கொண்ட பிரபஞ்சத்தை உருவாக்குகிறது என்னும் ஆன்மிக உண்மையையும் விளக்குவதாகக் கொள்ளலாம்.

இதை, அருணகிரிநாதரின் திருப்புகழிலிலுள்ள திருவெழுகூற்றிருக்கையின் தொடக்கத்தில் உள்ள 'ஓருருவாகிய தாரகப் பிரமத்து ஒன்றாய் ஒன்றி இருவகைத்தாகி…" என்ற தொடர் குறிப்பதாகக் கருதலாம்.

திரு என்ற சிறப்பு அடைமொழி கொண்ட திருவெழுகூற்றிருக்கை என்பது இறைவனின் அருட்செயல்களையும் சில தத்துவங்களையும் உள்ளடக்கிய பாடலைக் குறிக்கும். "திரு" என்பது முத்தி இன்பத்தையும், எழு என்னும் சொல் அந்த இன்பம் நம்முள் எழுவதையும், கூற்று என்பது அதன் இருக்கையையும் குறிக்கும் என்பர்.

இப்பாடல்களில், எண்களைக் குறிக்கும் சொற்களால் அமைந்த தேர் வடிவின் நடுவிலுள்ள தட்டில் இறையின் உருவத்தை வரைதல் வழக்கம்.

இத்தகைய ஓவியங்கள் திருவருள் பெற்றதாகக் கருதப்பட்டு, ஆலயங்களில் வைக்கப்படுவதுண்டு. இறை பற்றி அமைக்கப்பட்ட எழுகூற்றிருக்கைகளில் சில 'திரு' என்ற அடைமொழியின்றி வருதலும் உண்டு.

சிவபெருமான், திருமால், முருகன் ஆகிய கடவுளரைப் பற்றி நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், அருணகிரிநாதர் ஆகியோர் யாத்துள்ள திருவெழுகூற்றிருக்கைகள் நன்கு அறியப்பட்டவை.

நக்கீரர் அருளிய திருவெழுகூற்றிருக்கையை மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோவிலிலும், திருமங்கை ஆழ்வார் அருளியதைக் கும்பகோணம் சாரங்கபாணி கோவிலிலும், திருஞானசம்பந்தர் அருளியதைக் கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கோவிலிலும் அருணகிரிநாதர் அருளியதைச் சுவாமிமலை, திருவண்ணாமலை கோவில்களிலும் காணலாம்.

19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பல கடவுளர்களை முன்னிட்டுப் பல கூற்றிருக்கைகளை இயற்றியுள்ளார். இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பாடல், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி பெருமாள் மீது பாடப்பெற்ற பாடல்.

எழுகூற்றிருக்கைச் செய்யுள்களைத் தேர் அமைப்பில் பொருத்திப் பார்க்கையில், அவற்றில் உள்ள சொற்கள் தேர்த்தட்டின் மேலும்

கீழுமுள்ள பகுதிகளை முக்கோண வடிவில் நிரப்புவனவாக இருப்பதைக் காணலாம். தேர் அமைப்பின் மேலுச்சியில் இருக்கும் கூறு, கீழ்ப்பகுதியின் அடித்தளக் கூறாக அமையும். இதுபோல மேற்பகுதியின் உச்சியிலிருந்து இரண்டாவது கூறு கீழ்ப்பகுதியின் அடித்தளத்திலிருந்து இரண்டாவது கூறு என்ற வகையில் தொடர்ந்து தேர் அமைப்பு முழுமையாகும்.

தினமும் பாராயணத்திற்கு ஏற்றது இந்த திரு எழுகூற்றிக்கை. ஆன்மிக அன்பர்கள் மட்டும் அல்லாது, கடவுள் மறுப்பு கொள்கையாளர்களும் தமிழின் சிறப்பை போற்றி இதனை படித்து பயன்பெற வேண்டும் என்பதே இந்த நூலின் நோக்கம்.

திருஎழுகூற்றிக்கை

திருஞானசம்பந்தர் அருளியது.

ஓர் உரு ஆயினை; மான் ஆங்காரத்து

ஈர் இயல்பு ஆய், ஒரு விண் முதல் பூதலம்

ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்

படைத்து, அளித்து, அழிப்ப, மும்மூர்த்திகள் ஆயினை;

இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை;

ஓர் ஆல் நீழல், ஒண் கழல் இரண்டும்

முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி

காட்டினை; நாட்டம் மூன்றும் ஆகக் கோட்டினை;

இரு நதி அரவமோடு ஒருமதி சூடினை;

ஒருதாள் ஈர் அயில் மூ இலைச் சூலம்,

நால்கால் மான்மறி, ஐந்தலை அரவம்,

ஏந்தினை; காய்ந்த நால் வாய் மும் மதத்து

இரு கோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை;

ஒரு தனு இருகால் வளைய வாங்கி,

முப்புரத்தோடு நானிலம் அஞ்ச,

கொன்று தலத்து உற அவுணரை அறுத்தனை;

ஐம்புலன், நால் ஆம் அந்தக்கரணம்,

முக்குணம், இருவளி, ஒருங்கிய வானோர்

ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோடு,

இரு பிறப்பு ஓர்ந்து, முப்பொழுது குறை முடித்து,

நால்மறை ஓதி, ஐவகை வேள்வி

அமைத்து, ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி,

வரல் முறை பயின்று, எழு வான்தனை வளர்க்கும்

பிரமபுரம் பேணினை;

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை;

இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனை;

பொங்கு நால்கடல் சூழ் வெங்குரு விளங்கினை;

பாணி மூஉலகும் புதைய, மேல் மிதந்த

தோணிபுரத்து உறைந்தனை; தொலையா இருநிதி

வாய்ந்த ந்தராய் ஏய்ந்தனை;

வர புரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை;

ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்

விறல் கெடுத்து அருளினை; புறவம் புரிந்தனை;

முந்நீர்த் துயின்றோன், நான்முகன், அறியாப்

பண்பொடு நின்றனை; சண்பை அமர்ந்தனை;

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்

ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை;

எச்சன் ஏழ் இசையோன் கொச்சையை மெச்சினை;

ஆறுபதமும், ஐந்து அமர் கல்வியும்,

மறை முதல் நான்கும்,

மூன்று காலமும், தோன்ற நின்றனை;

இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்,

மறு இலா மறையோர்

கழுமல முது பதிக் கவுணியன் கட்டுரை

கழுமல முதுபதிக்கவுணியன் அறியும்;

அனைய தன்மையை ஆதலின், நின்னை

நினைய வல்லவர் இல்லை, நீள் நிலத்தே.

அருணகிரிநாதர் அருளியது

ஓர் உருவாகிய தாரக பிரமத்து

ஒரு வகைத் தோற்றத்து இரு மரபு எய்தி

ஒன்றாய் ஒன்றி இருவரில் தோன்றி மூவாது ஆயினை

இரு பிறப்பாளரின் ஒருவன் ஆயினை

ஓராச் செய்கையின் இருமையின் முன் நாள்

நான் முகன் குடுமி இமைப்பினில் பெயர்த்து

மூவரும் போந்து இரு தாள் வேண்ட

ஒரு சிறை விடுத்தனை

ஒரு நொடி அதனில் இரு சிறை மயிலின்

முந்நீர் உடுத்த நானிலம் அஞ்ச நீ வலம் செய்தனை

நால் வகை மருப்பின் மும்மதத்து இரு செவி

ஒரு கைப் பொருப்பன் மகளை வேட்டனை

ஒருவகை வடிவினில் இரு வகைத்து ஆகிய

மும்மதன் தனக்கு மூத்தோன் ஆகி

நால் வாய் முகத்தோன் ஐந்து கைக் கடவுள்

அறுகு சூடிக்கு இளையோன் ஆயினை

ஐந்து எழுத்து அதனில் நான் மறை உணர்த்தும்

முக்கண் சுடரினை இரு வினை மருந்துக்கு

ஒரு குரு ஆயினை

ஒரு நாள் உமை தரு இரு முலைப் பால் அருந்தி

முத்தமிழ் விரகன் நால் கவி ராஜன்

ஐம்புலக் கிழவன் அறு முகன் இவன் என

எழு தரும் அழகுடன் கழுமலத்து உதித்தனை

அறு மீன் பயந்தனை ஐந் தரு வேந்தன்

நான் மறைத் தோற்றத்து முத்தலை செம் சூட்டு

அன்றில் அம் கிரி இரு பிளவாக ஒரு வேல் விடுத்தனை

காவிரி வட கரை மேவிய குரு கிரி இருந்த

ஆறு எழுத்து அந்தணர் அடி இணை

ஏரகத்து இறைவன் என இருந்தனையே.

நக்கீரர் அருளியது

ஓர் உடம்பு ஈருரு ஆயினை ஒன்றுபுரிந்து
ஒன்றி நீர் இதழ்க் கொன்றை சூடினை
மூவிலைச் சூலம் ஏந்தினை
சுடருஞ் சென்னி மீமிசை
இருகோட்டு ஒருமதி எழில்பெற மிலைச்சினை

ஒருகணை இருதோள் செவியுற வாங்கி
மூவெயில் நாற்றிசை முரண்அரண் செகுத்தனை
ஆற்ற முன்னெறி பயந்தனை
செறிய இரண்டு நீக்கி
ஒன்று நினைவோர்க்கு உறுதி ஆயினை

அந்நெறி ஒன்று
மனம்வைத்து இரண்டும்
நினைவி லோர்க்கு
முன்னெறி உலகங் காட்டினை
அந்நெறி நான்கு என ஊழி தோற்றினை
சொல்லும் ஐந்தலை அரவசைத்து அசைந்தனை

நான்முகன் மேன்முகம் கபாலம் ஏந்தினை

நூன்முக முப்புரி மார்பில்

இருவர் அங்கம் ஒருங்குடன் ஏந்திய

ஒருவநின் ஆதி காணா திருவர்

மூவுலகு உழன்று நாற்றிசை உழிதர

ஐம்பெருங் குன்றத்து அழலாய்த் தோன்றினை

ஆறுநின் சடையது ஐந்துநின் நிலையது

நான்குநின் வாய்மொழி மூன்றுநின் கண்ணே

இரண்டு நின் குழையே ஒன்றுநின் ஏறே

ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க

இருங்களிற்று உரிவை போர்த்தனை நெருங்கி

முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய

அறுதொழி லாளர்க்கு உறுதி பயந்தனை

ஏழில் இன் நரம்பு இசைத்தனை

ஆறில் அமுதம் பயந்தனை

ஐந்தில் விறலியர் கொட்டும் அழுத்த வேந்தினை

ஆல நீழல் அன்றிருந்த அறநெறி

நால்வர் கேட்க நன்கு இனிது உரைத்தனை

நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்கொன்ற
அங்கு இருவரை எறிந்த ஒருவன்

தாதை ஒருமிடற்று இருவடி வாயினை
தருமம் மூவகை உலகம் உணரக்
கூறுவை நால்வகை இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை
ஐங்கணை அவனொடு காலனை அடர்த்தனை

அறுவகைச் சமயமும் நெறிமையில் வகுத்தனை
ஏழின் ஓசை இராவணன் பாடத்
தாழ்வாய்க் கேட்டவன் தலையளி பொருத்தினை
ஆறிய சிந்தை யாகி
ஐங்கதித்தேஒரொடு திசைசெல விடுத்தோன்

நாற்றோள் நலனே நந்தியிங்கு இருடி
என்றேற்ற பூதம் மூன்றுடன் பாட
இருகண் மொந்தை ஒருகணங் கொட்ட
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப அதனால்

சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிது எனக் கொள்ளா ஆகல் வேண்டும்

வெறிகமழ் கொன்றையொடு வெண்ணிலவு அணிந்து

கீதம் பாடிய

அண்ணல் பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே. ...

(வெண்பா)

பணிந்தேன்நின் பாதம் பரமேட்டி பால் நீழல்

அணிந்தால வாயில் அமர்ந்தாய் - தணிந்து என்மேல்

மெய்யரிவு தீரப்ப அணித்தருளு வேதியனே

ஐயுற ஒன்று இன்றி அமர்ந்து.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது

வாழி பரகாலன் வாழி கலிகன்றி,
வாழி குறையலோர் வாழ் வேந்தன்,——வாழியரோ
மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள்
மங்கையர்கோன் தூயோன் சுடர்மான வேல் !

ஒரு பேர் உந்தி இரு மலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை
ஒரு முறை இரு சுடர் மீதினில் இயங்கா க

மும் மதிள் இலங்கை இரு கால் வளைய
ஒரு சிலை ஒன்றிய ஈர் எயிற்று அழல் வாய்
வாளியில் அட்டனை மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மான் உரி இலங்கு மார்வினில்
இரு பிறப்பு ஒரு மாண் ஆகி

ஒரு முறை ஈர் அடி மூவுலகு அளந்தனை
நால் திசை நடுங்க அம் சிறைப் பறவை ஏறி
நால் வாய் மும் மதத்து இரு செவி
ஒரு தனி வேழத்து அரந்தையை
ஒருநாள்இரு நீர் மடுவுள் தீர்த்தனை

முத் தீ நான்மறை ஐ வகை வேள்வி

அறு தொழில் அந்தணர் வணங்கும் தன்மையை

ஐம்புலன்   அகத்தினுள் செறித்து

நான்கு உடன் அடக்கி முக் குணத்து இரண்டு அவை அகற்றி

ஒன்றினில்ஒன்றி நின்று

ஆங்கு இரு பிறப்பு அறுப்போர் அறியும் தன்மையை

முக் கண் நால் தோள் ஐ வாய் அரவோடு

ஆறு பொதி சடையோன்   அறிவு அரும் தன்மைப் பெருமையுள்

நின்றனை

ஏழ் உலகு எயிற்றினில் கொண்டனை

கூறிய அறு சுவைப் பயனும் ஆயினை

சுடர்விடும் ஐம் படை அங்கையுள் அமர்ந்தனை

சுந்தர நால் தோள் முந்நீர் வண்ண

நின் ஈர் அடி ஒன்றிய மனத்தால்

ஒரு மதி முகத்து மங்கையர் இருவரும் மலர் அன

அங்கையில் முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை

நெறி முறை நால் வகை வருணமும் ஆயினை

மேதகும் ஐம் பெரும் பூதமும் நீயே

அறுபதம் முரலும் கூந்தல் காரணம்

ஏழ் விடை அடங்கச் செற்றனை

அறு வகைச் சமயமும் அறிவு அரு நிலையினை

ஐம்பால் ஓதியை ஆகத்து இருத்தினை

அறம் முதல் நான்கு அவை ஆய் மூர்த்தி மூன்று ஆய்

இரு வகைப் பயன் ஆய்

ஒன்று ஆய் விரிந்து நின்றனை

குன்றா மது மலர்ச் சோலை வண் கொடிப் படப்பை

வரு புனல் பொன்னி மா மணி அலைக்கும்

செந்நெல் ஒண் கழனித் திகழ் வனம் உடுத்த

கற்போர் புரிசைக் கனக மாளிகை

நிமிர் கொடி விசும்பில் இளம் பிறை துவக்கும்

செல்வம் மல்கு தென் திருக் குடந்தை

அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க

ஆடு அரவு அமளியில் அறிதுயில் அமர்ந்தபரம

நின் அடி இணை பணிவன்

வரும் இடர் அகல மாற்றோ வினையே

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளியது

ஒரு பெருங் கரத்தால் ஒரு மலை எடுத்து ஆண்டு
இரு மருப்பாநினம் ஒருங்கு காத்தனை
ஒரு காரணத்தால் இரயுதாய் மகவாய்
மூவாப் பொதுவர் முல்லை இரு நகர்

ஒன்று இடை வளன்ர்தனை ஒரு பேய் உருண்டு
எஞ்சலில் களியோடு மூன்று பொழுதினும்
நாளைத் தூக்கிய இருமரு தழிப்பான்
ஒருரற் கட்டுண்டு ஒருவாறழுதனை
இருதிரு வடியாற் சகடு கொன்றனை
முன்நாற் புலவர் தம் ஐவகை நிறத்த

நாற்கவி சூடினை மூவிரு சமயத்து
ஒன்றுந்தேவரும் யான் ஒருவனே என
இரங்குபு மூன்றாம் மைத்துனர் குணர்த்தினை
நாற்பயன் விழைவார்க் கஞ்சல் நல்கி
ஆறமர் சடையான் ஆதியர் வழுத்த
அள்ளிக்கேனிக்கு ஐ என அமர்ந்தனை

நான் கூறிடு முத்தமிழ்க் கவி ஒலியும்
இரு காதிடை கொளற்கு ஒரு சிறிது வேட்டனை
ஓரம் ஆர்ந்த இருமையிற் கொடியார்
அவையிடை முத்தொத்து அறலுக்கு அழுதாள்
உவகையினால் உன்னுயரருள் விளக்கினை

ஐவர் ஒன்று எனும் பேர் வாணற் செற்றனை
அறுவை பற்பல கொண்டு அணிமரம் ஏறினை
ஐங்கணைக் கிழவனை மகவாய் பெற்றனை
நாலொடு மூன்று நன்மகர்த் துணித்த
ஈர்வாள் ஏந்தும் ஒரு பெரு மாமனைக்

கடற்படையுடன் கெடக் காய்ந்தர சாண்டனை
கண்ணன் உன் திருப்பேர் காசில தாயின்
என் துயர் கண்டே இருப்பா யாதலின்
நந்துறத் தணந்து நலமுழு தருள்வாய்
செச்சை ஆங்காங்கு தெரிதர நிவந்த
பச்சைமால் வரை நேர் பார்த்தசாரதியே.

ஆசிரியரின்

மக்கள் மனம் கவர்ந்த பிற நூல்கள்.








இந்த புத்தகங்களை, ஆன்லைனில்,

அமேசான், விக்கிமீடியா, மின் நூலகம் மற்றும் ஆடியோ புத்தகமாக Channel G podcastல் கேட்கலாம்.

இந்த புத்தக கட்டமைப்புக்கு பணம் தந்து உதவலாம்.
இது மேலும் புத்தகம் வெளிவர ஊக்கம் அளிக்கும்.

குறிப்புகளுக்காக.....

குறிப்புகளுக்காக.....

குறிப்புகளுக்காக.....

நூலாசிரியர் பற்றி...

விசு அய்யர், தமிழ்நாட்டில் உள்ள வீரம் செறிந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில், சிவகெங்கை சீமையில் இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில், இன்று உலக எழுத்தறிவு தினமாக கொண்டாடப்படும் தினத்தில் தோன்றியவர்.

வரி சட்டத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். பள்ளி நாள் முதல் தொடர்ந்து சிறந்த மாணவனாக தேர்ந்து எடுக்கப்பட்ட இவர் இந்திய அளவிலான நினைவு திறன் போட்டியில் பரிசு பெற்றவர். தேசிய அளவிலான அதிவேக தட்டச்சு போட்டியில் வெற்றி பெற்றவர். “சித்தாந்த ரத்னா”, “திருவருட் செல்வர்”, “கைரேகை கலைஞன்” போன்ற இவர் பெற்ற பாராட்டுக்களும் நன்மதிப்பும் பெருமைக்கு உரியன.

இன்று வரை உண்மையான பிரம்மச்சரிய வாழ்க்கையில், உணவிலும், உணர்விலும் இயற்கையோடு இனைந்து வாழும் சீரிய ஒழுக்கத்தை கொண்டவர். பெரியபுராணம், திருக்குறள், மற்றும் சைவ திருமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் சமய இலக்கியங்களில் பல ஆய்வு கட்டுரைகளை பதிப்பித்து உள்ளார்.

பன்முக திறமை கொண்ட இவர் எழுதிய சோதிட புத்தகங்களும் வார இதழில் எழுதும் தொடர் கட்டுரைகளும் வாசகர்கள் நெஞ்சத்தை கிள்ளி செல்லும். இவருக்கு என்றே ஒரு வாசகர் கூட்டம் இவரை சுற்றி தொடரும்.

சென்னை அரிமா சங்கம், சென்னை சுழற் சங்கம், அறிதுயில் சங்கம் மற்றும் குடும்ப நற்பணி மன்றம் போன்ற பல இடங்களில் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தி உள்ளார்.

உடலாலும் உள்ளத்தாலும் சீரிய ஒழுக்கத்தினாலே இன்றும் சொல்லிலும் செயலிலும் இளைஞனாகவே இருக்கின்றார். சொந்த வாழ்க்கையில் மட்டுமின்றி, நடைமுறை வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்க முறையினை செயல்படுத்தும் இவர் கையில் திருக்குறளும், பையில் திருநீறும், மெய்யில் உருத்திராக்கமும் இருக்கும் என்பதே இவரின் எளிய அடையாளம்.